# பாஞ்சாலி சபதத்தில் பெண்ணியத் திறனாய்வு

# Panjali Sabatham A Feministic Criticism

மாணிக்கம் கோவிந்தராஜு / G.Manickam Govindaraju[1]
பேராசிரியர் முனைவர் மு. இராசேந்திரன் / Professor Dr. M. Rajantheran[2]
முனைவர் சில்லாழி கந்தசாமி / Dr. Sillllalee S.Kandasamy[3]

Date of submission: 2023-01-08
Date of acceptance: 2023-03-20
Date of Publication: 2023-07-30
Corresponding author's Name:
Dr. M. Rajantheran
Email: rajantheran@um.edu.my

**Abstract**

Literary criticism aims to excavate the deeper meanings embedded in literary works. Aspects invisible to the eyes of the writer and reader can be brought to light via literary criticism. While literature is an artistic product, literary criticism can be described as scientific research on literary works. The creation of literature is parallel to the conception of literary criticism. Once a literary work is thoroughly investigated, literary criticism accompanies the process. Hence, it is impossible to separate literary criticism from literature. Fundamentally, literature brings pleasure to human beings. However, literary criticisms make them think. Any literary work gains more value when it goes through literary criticism as the process identifies the strengths and weaknesses of the work. Panjali Sabatham, one of the famous works by the renowned Mahakavi Bharathiyar, is critically reviewed in this paper. Since literary criticism allows one to look at one complete work or specific portions of a work, this paper focuses on the feminist aspects of Panjali Sabatham using the Literary Criticism Framework. The criticism yields important findings like Bharathi's objective for naming the work as Panjali Sabatham, the penalties for violence against women, feminist pride, and female slavery, which are intertwined within the work.

**Keywords:** Panjali Sabatham, Literature Criticism, Feminism, Barathiyar, Poem Literature

## முன்னுரை

இலக்கியம் என்பது கலை வடிவிலான ஆக்கம் என்பர், திறனாய்வு என்பதுவோ ஓர் இலக்கியப்படைப்பின் மீதான அறிவியல் ஆராய்ச்சி எனலாம். இலக்கியம் தோன்றத் தொடங்கிய உடனே திறனாய்வும் தோன்றிவிடுகிறது. ஓர் இலக்கியத்தை எப்படியெல்லாம் படைக்கலாம் எனச் சிந்திக்கும் போதும் இதனைப் படைப்பாளன் ஏன் இப்படிப் படைத்தான் என அதன் உட்பொருளைத் தேடும் போதும், நாம் ஏன் இப்படிப் படைக்கிறோம் எனச் சுய விசாரனை செய்யும் போதும் இலக்கியத்திற்கான திறனாய்வு தோன்றி

[1]The author is a research student in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. GManickam.Govindaraju@taylors.edu.my

[2]The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@um.edu.my

[3]The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. silllalee@um.edu.my

விடுகிறது. எனவே இலக்கியமும் திறனாய்வும் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க இயலாதது (William Kurtz, 1970).

அடிப்படையில் இலக்கியங்கள் மனிதனை மகிழ்விக்கின்றன. அவனை ஆற்றுப்படுத்துகின்றன. பல வேளைகளில் அவன் கண்டறியாத உலகிற்குள் கொண்டு சென்று அவனுக்குள் அமைதியையும் திருப்தியையும் தோன்றச் செய்கின்றன. ஆனால் திறனாய்வோ அவனைச் சிந்திக்க வைக்கின்றன. அவன் ஓர் படைப்பைப் பார்க்காத கோணத்தில் பார்க்க வைக்கின்றன. படைப்பாளன் மீது மேலும் மரியாதையைக் மரியாதையைக் கூட்டுகின்றன (Sybil Mary, 1966).

இலக்கியங்கள் என்றால் அது திறனாய்வுக்கு உட்படுவதில் இருந்து விளக்கு அடைவது சாத்தியமல்ல. இது எத்தகைய பெரிய படைப்பாளனின் படைப்பாக வேண்டுமானாலும் இருக்கலாம். இன்னும் கூறப்போனால் ஓர் இலக்கியப் படைப்பு திறனாய்வுக்கு உட்படுத்தப்படும் போதுதான் அதன் தரம் மேலும் கூடுகிறது. ஏனெனில் திறனாய்வானது ஒரு படைப்பிலக்கியத்தின் குணத்தை மட்டும் போற்றுவது கிடையாது. குற்றங்களையும் ஆய்ந்து முன்வைக்கும் திறம் உடையது (Winchester, 2013).

அந்த வகையில் மகாக்கவி பாரதியாரின் படைப்புகளுள் தனித்துவம் மிக்கதாகக் கருதப்படும் பாஞ்சாலி சபதம் இலக்கியத்தைத் திறனாய்வு செய்வதாகவே தற்போதைய ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது. திறனாய்வில் ஒட்டுமொத்தமாக ஓர் இலக்கியத்தை ஆய்வு செய்ய இயலும். அல்லது அதில் ஏதாவது ஒரு கூற்றை ஆய்வு செய்வதுவும் பொருந்தும் தற்போதைய ஆய்வு இரண்டாவது வகையைச் சார்ந்தது. இந்தத் திறனாய்வுக் கட்டுரை பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் பெண்ணியக் கூறுகளை ஆய்வு செய்கிறது.

## ஆய்வின் நோக்கம்

தற்போதைய ஆய்வானது இரண்டு நோக்கங்களை முன்னிருத்தி அமைக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1) பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் உள்ள பெண்ணியக் கூறுகளை அடையாளம் காணல்.

2) பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் காணக்கிடக்கும் பெண்ணியக் கூறுகளைத் திறனாய்வு செய்தல்.

## ஆய்வுச் சிக்கல்

இலக்கியத்தில் திறனாய்வு என்பது ஓர் இலக்கியப்படைப்பில்உள்ள ஆழ்ந்தபொருளை வெளிக்கொணரும் ஆற்றலுடையது. படைப்பவனும் வாசிப்பாளனும் கூடக் காண இயலாத சில உட்பொருள்களைத் திறனாய்வாளனால் மட்டுமே காண முடியும். அதற்குத் திறனாய்வாளர் ஆழ்ந்துபட்ட அறிவைக் தாம் ஆய்வு செய்யும் துறையில் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் படைப்பாளனின் ஒரு படைப்பைப் படைத்ததன் நோக்கத்தையும் தாண்டித் திறனாய்வாளர் ஓர் இலக்கியத்தை அனுகவும் திறனாய்வு செய்யவும் இயலும் (Rawlinson, 1968).

பாரதியின் பாஞ்சாலி சபதம் இவர்தம் படைப்புகளுள் தனிச்சிறப்பு மிக்கது எனலாம். ஓர் இலக்கியத்தைப் படைப்பதற்கும், ஏற்கனவே இலக்கிய உலகில் நிலைபெற்ற ஓர் இலக்கியத்தை மொழிபெயர்ப்பாக அல்லாமல் புதிய கோணத்தில் மறு ஆக்கம் செய்வதற்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. மூலப் படைப்பில் அதன் தன்மை மாறாமல் அதே நேரத்தில் புதுமையைப் புகுத்துவது இலக்கியப்படைப்பில் மிகக் கடினமான செயல். இதனைத்தான் பாரதியார் பாஞ் சாலி சபதத்தில் செய்துள்ளார். உலகின் மிகப் பெறும் புகழ் பெற்ற மகாபாரதம் எனும் மாபெரும் இதிகாசத்தில் அதிலும் அந்த இதிகாசத்தில் திருப்புமுனையாக அமைந்த சூதுப்போர் சதுக்கத்தில் இந்த அசாத்தியத்தை நிகழ்த்தியுள்ளார் பாரதியார் (Sekar, 2007).

இதில் பெண்ணுரிமை என்பது மையப் புள்ளியாக விளங்குகிறது. இந்தப் பெண்ணுரிமை என்பது எவ்வாறு பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் வெளிப்பட்டுள்ளது என்பதுவே இந்த ஆய்வின் சிக்கலாகும்.

## இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடு

இலக்கியத் திறனாய்வு என்பது இலக்கியத்தின் திறனை ஆய்வது எனப்படுகிறது. இதனால் இலக்கியத்திற்கு திறன் இருக்கிறது என்று பொருளாகிறதுரொரு படைப்பிலக்கியத்தின் திறன் என்ன என்பதைக் கண்டறிந்து அது எப்படி அவ்விலக்கியத்தில் நிலைபெற்றுள்ளது என்பதை ஆராய்வதே இலக்கியத் திறனாய்வு. திறனாய்வை ஆங்கிலத்தில் criticism என்பர். இந்தச் சொல்லை முதலில் பயன்படுத்தியவர் ஜான் டிரைடன் (John Dryden) (18ஆம் நூற்றாண்டு) எனும் ஆங்கிலக் கவிஞர் ஆவார். அதற்கும் முன்னர் Critic என்ற சொல்லைப் பயன்படுத்தியவர் சிந்தனையாளர் பிரான்சிஸ் பேக்கன் (Francis Bacon) என்பார் ஆவார் (Sybil Mary, 1966).

தமிழில் திறனாய்வு எனும் சொல் தோன்றுவதற்கு முன்னர் இதனை விமர்சனம் எனும் சொல்லால் அறிமுகம் செய்தவர் பேராசிரியர் ஆ.முத்து சிவன் (1944). விமரிசை எனும் வேர்ச்சொல்லைக் கொண்ட இதற்குப் பாராட்டுதல், விளக்கிச் சொல்லுதல், போற்றுதல் எனப் பொருளாகும். தமிழில் திறனாய்வு எனும் சொல்லை அறிமுகம் செய்தவர் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் (1953). இன்று கல்வியாளர்களிடத்தே திறனாய்வு எனும் சொல் பிரசித்தி பெற்றிருப்பது போல ஊடகவியளாலர்களிடத்தே விமர்சனம் எனும் சொல் விளங்கி வருகிறது. இலக்கியம் திறனாய்விற்கு உட்படுத்தப்படுகிறது. திரைப்படங்கள் விமர்சனத்திற்கு உட்படுத்தப்படுகின்றன (Eswaran, 2014).

## பாஞ்சாலி சபதம்

உலக இலக்கியங்களுள் தனிச்சிறப்பு உடைய இரண்டு மாபெரும் இலக்கியங்கள் என்றால் இராமாயணமும் மகாபாரதமும் என்பது யாவரும் அறிந்த ஒன்று. இவற்றுள் மகாபாரதம் உலகில் மிகப்பெரிய இதிகாசமாக விளங்குகிறது. மகாபாரதக் கதையின் திருப்புமுனையே சூதுச் சருக்கம்தான். அதுவே பாரதப் போருக்கு வித்திட்டது. அதற்குப் பாஞ்சாலியாகிய துரௌபதி எடுத்த சபதமே காரணம் ஆகும். பாரதி மகாபாரதத்தில் பாஞ்சாலி சபதத்தை மட்டுமே மையப்படுத்தி இக்கவிதையை நாடகத் தன்மையுடன் இயற்றியுள்ளார். பாஞ்சாலி சபதத்தின் மூலம் நாட்டு விடுதலையைப் பற்றி எடுத்துரைக்கிறார் பாரதி (Subramanian, 2018).

பாரதியார் மகாபாரதத்தை முன்னிருத்திப் பாஞ்சாலி சபதத்தைப் படைத்திருப்பினும் இதில் அவரது நோக்கம் மகாபாரதக் காப்பியத்தைப் பழைமைத் தன்மையுடன் எடுத்துக் காட்டுவது அன்று; மாறாக அதனைச் சமகாலச் சிந்தனைக்கு உட்படுத்திப் படைத்துள்ளார். பாஞ்சாலி சபதத்தின் மூலம் மகாகவி பாரதியார் விடுதலை வேட்கை, பெண்ணியம், சமநிலைச் சமுதாயத்தைப் படைத்தல், அடக்கு முறையாளர்களுக்கான எச்சரிக்கை, அநீதியை யாருக்காகவும் பொறுப்பதில்லை போன்ற கூறுகளை முன்வைக்கிறார் (Hari Kiruṣnan, 2016).

அதே வேளையில் நாட்டு விடுதலையின் மூலம் பெண் விடுதலையை உணத்துவதும் இப்படைப்பின் நோக்கமாகின்றது. அதோடு 'பாஞ்சாலி'யின் மூலம் முற்போக்குக் கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார் பாரதி.

பாஞ்சாலி சபதத்தின் தனிச்சிறப்பே பண்டிதத் தமிழ் நடையிலிருந்து விடுபட்டு, எளிய நடையில், எளிய சொற்பதங்கள் கொண்டு மக்கள் விரும்பும் வகையில் மெட்டு அமைத்துப் பாடல்களை உருவாக்கியுள்ளதே ஆகும். பாரதியிக்குப் பாஞ்சாலி சபதம் இயற்றுவதற்கு வடமொழி வியாச பாரதம், தமிழின் வில்லிபாரதம் ஆகியவை உறுதுணையாக இருந்த போதும் இது ஆகிகாவியத்தின் தன்மைகளிலிருந்து மாறுபட்டுத் தமிழ்ச் சூழலுக்கு ஏற்பப் படைக்கப்பட்டிருத்தலை அறியலாம். இது எல்லாவற்றிற்கும் மேலாகப் பெண்ணுரிமையை ஒரு பெண்ணின் கூற்றாகவே கூறியிருப்பது பாஞ்சாலி சபதத்தின் தனிச்சிறப்பு.

## நூலின் அமைப்பு

பாஞ்சாலி சபதம்' இரண்டு பாகங்களையும்

ஐந்து சருக்கங்களையும் கொண்டது.

1) முதற்பாகம் அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம் என இரண்டு சருக்கங்களைக் கொண்டது.

2) இரண்டாம் பாகம் அடிமைச் சருக்கம், துகில் உரியல் சருக்கம், சபதச் சருக்கம் என மூன்று சருக்கங்களைக் கொண்டது.

ஒவ்வொரு பாகமும் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. பராசக்தி, வாணி ஆகிய தெய்வங்களைப் பற்றிய கவிதைகள் அவை.

### சபாஞ்சாலி சபதத்தில் பெண்ணியக் கூறுகள்

பாஞ்சாலி சபதத்தில் பென்னியக் கூறுகளைப் பாரதியார் வெவ்வேறு சிந்தனைகளில் வெளிப்படுத்தியுள்ளார். இது ஒவ்வொன்றும் பெண்ணியச் சிந்தனை, விடுதலை, பெண்ணின் பேராற்றல் போன்ற பல்வேறு கூறுகளாக விரிகின்றன.

### தலைப்பில் புரட்சி

நாடகக் கலைஞர்கள் பாஞ்சாலி சபதத்தை 'திரௌபதி வஸ்திராப அரணம்' என்கின்றனர். ஆனால் பாரதியாரோ அப்பகுதிக்குப் பாஞ்சாலி சபதம் எனப் பெயரிடுகிறார். கொடுங்கோலர் அவையிலே நின்று சபதம் செய்த பாஞ் சாலியின் வீரத்தை, அடிமைப்பட்டு அடங்கி வாழும் பாரத மக்களுக்கு நினைவூட்டி, அவர்களையெல்லாம் விடுதலைக்குப் போராடும் வீராகளாக மாற்றும் நோக்கத்துடன், தம் குறுங்காப்பியத்திற்குப் பெயர் வைத்தார் என்கிறார் ம.பொ.சி. பாஞ்சாலியைத் தன்னிகரற்ற தலைவியாக முதன்மைப்படுத்தியதாலும் காப்பியத்தின் மையக் கருத்து அவளின் சபதமாக இருப்பதால் பாரதியார் அதற்குப் பாஞ்சாலி சபதம் எனப் பெயரிட்டாரென எண்ணுவது பொருந்தும் .

### குற்றம் கடிதல்

பாஞ்சாலி சபதத்தில் குற்றம் யார் செய்தாலும் அக்குற்றத்திற்காக வெகுண்டெழு வேண்டும். அவ்வாறே பாஞ் சாலியும் தனக்குத் தீங்கு செய்தவர்களைப் நோக்கி வெஞ்சினம் கூறுகிறாள்.

தேவி திரௌபதி சொல்வாள் - 'ஓம்,
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்;
பாவிதுச் சாதனன் செந்நீர், - அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்,
மேவி இரண்டுங் கலந்து - குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான்; - இது
செய்யுமுன் னேமுடி யே'னென் றுரைத்தாள்.

ஓமென் றுரைத்தனர் தேவர்; - ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்.
பூமி யதிர்ச்சி உண்டாச்சு. - விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழற் காற்று.
சாமி தருமன் புவிக்கே - என்று
சாட்சி யுரைத்தன பூதங்க ளைந்தும் (பாஞ் சாலி சபதம்).

இந்தச் சபத்தின் அடிப்படைத் தத்துவமே பெண்ணினத்திற்கு எதிர்காலத்தில் யாரும் துயர் செய்ய எண்ணக் கூடாது என்பதுதான். அதிகாரமும், பலமும் ஒரு பெண்ணின் மனோதிடத்தை அசைக்க முடியாது எனும் சிந்தனையை இவ்விடத்தில் முன்வைக்கிறார் பாரதி. அவளது சபதமானது பெண்ணுக்குத் துயர் விளைவித்தவருக்குப் பொருத்தமான தண்டனை என்பதனையும் இயற்கையே ஒப்புக்கொள்வது போல தேவர், வானம், பூமி, காற்று ஆகியவற்றிடம் இருந்து வரும் வினையாடல்களின் மூலம் உறுதி படுத்துகிறார் பாரதி.

### பெண்ணைத் தெய்வமாகப் போற்றுதல்

பாரதியின் இக்கூற்றுப்படி பெண் என்பவள் பராசக்தியாவாள். அதனால்தான் துரௌபதி யார் என்பதைப் பாரதியே ஓரிடத்தில் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். துச்சாதனன் துகிலுரியத் துகிலுரியக் கண்ணபிரான் திருவருளால் புதிது புதிதாய் வண்ண வண்ண பட்டுச் சேலைகள்

வளர்ந்தன. இறுதியில் துச்சாதனன் கை சோர்ந்து நிலைதடுமாறிக் கீழே விழுகிறான். அப்போது பாரதி,

"தேவர்கள் பூச்சொரிந்தார் ஓம்

ஜெயஜெய பாரத சக்தி என்றே

ஆவலொடு எழுந்து நின்று முன்னை

ஆரிய வீட்டுமன் கைதொழுதான்."

(பாஞ்சாலி சபதம்)

என்று பாடுகிறார். தேவர்கள் பாஞ் சாலிக்கு பூமழை தூவுகின்றனர். பிதாமகர் பீஷ்மர் எழுந்து நின்று அவளைக் கைகூப்பித் தொழுகிறார். பஞ்ச பாண்டவர்கள் என்ற ஐம்பூதங்களை இயக்குகின்ற 'சக்தி' அவளே என்பதாக "சக்தி' என்று பாரதியார் பாஞ்சாலியைக் குறிப்பிடுகிறார். பாரதச் 'சக்தியை' மனத்தில் வைத்தே பாஞ் சாலியைப் பாரதியார் படைத்திருக்கக்கூடும். பாரதியின் மனத்தில் உள்ள இந்தப் பாரதப் பெண்ணைப் பல இடங்களில் சுட்டிச் செல்கிறார் பாரதியார்:

### பெண்ணாகப் பிறந்திட மாதவம் செய்திடல் வேண்டும்

மேலும் பெண் என்பவள் அனைத்து பெறுமைகளையும் உடைய புனிதம் மிக்கவள். இதனைத் துரௌபதி, ஒளி படைத்த கண்ணினள், உறுதி கொண்ட நெஞ்சினள், களிபடைத்த மொழியினள், கடுமைகொண்ட தோளினள், தெளிவு பெற்ற மதியினள், குறிப்பாக எளிமை கண்டு இரங்கிச் சிறுமை கண்டு பொங்கும் இயல்பினள். நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்டவள் என்பதாகப் பெண்ணின் பெருமையை பாராட்டுகிறார் பாரதியார் (ஙிணீறீணீ, 2007).

"ஆணோடு பெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்

பேணிவந்தார்."

என பீஷ்மர் ஒப்புக் கொள்கிறார். ஆனால் இப்படிப் பட்ட நிலை தற்காலத்தில் மாறிவிட்டது. இதனையும் பீஷ்மர் கூற்றாகவே பாரதி பாடுகிறார்

"............ பின்னாளில் இஃது பெயர்ந்து போய்

இப்பொழுதை நூல்களினை எண்ணுங்கால், ஆடவருக்கு ஒப்பில்லை மாதர். ஒருவன் தன் தாரத்தை விற்றிடலாம் அல்லது தானமென வேற்றவர்க்குத் தந்திடலாம்.

### பெண்ணடிமை

அன்றைய காலம் தொட்டு இன்றுவரை பெண்கள் போகப் பொருள்களாகவே பார்க்கப்படுகின்றனர். இதனால்தான் வெகுண்ட பாரதி "ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்றார்கள், மாட்டை அடித்து வசமாக்கித் தொழுவினில் மாட்டுவது போல வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்தார்கள், நல்ல விலை கொண்டு நாயை விற்பார் அந்த நாயிடம் யோசனை கேட்பதுண்டோ? கொல்லத் துணிவின்றிப் பெண்ணை அந்நிலை கூட்டி வைத்தார்கள், பழி கூட்டி வைத்தார்கள், வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுத்தார்கள" போன்று பாரதி குறிப்பிடுகிறார் (Subramanian, 2018).

பாஞ்சாலியைக் கொடுமைபடுத்திய துரியோதனனும் துகிலுரித்து அவமானப்படுத்திய துச்சாதனனும் பாரதப் போரோடு முடிந்துவிடவில்லை, மறைந்து விடவில்லை, இப்போதும் தொடர்வது போல அந்தத் துரியோதன துச்சாதனர்கள் பாரதி காலத்திலும் ஏன் இப்போதும் கூடத் தொடர்கிறார்கள்.

கெடுமதி படைத்த இக்காலத் துரியோதனர் களும் துச்சாதனர்களும் பாரதப் பண்ணுக்குச் செய்யும் கொடுமைகளையே பாரதி பாஞ் சாலியின் வாயிலாகக் கூறியிருக்கின்றார். இக்காலத்தில் துரியோதனர்களையும் துச்சாதனர்களையும் எதிர்த்துப் போராடத் தன் சொந்தக் கணவனும் உதவமாட்டான், மாறாகத் தெய்வமே துணையாகும் அவளுக்கு என்பதுவே பாரதியின் தீர்க்க தரிசனம். இத்தகைய கயவர்கள் காலந்தோறும் தோன்றிக்கொண்டேதான் இருப்பார்கள்.

ஆதலால் பாரதப் பெண்ணும் பாஞ்சாலி போலக் காலந்தோறும் சபதம் செய்துகொண்டேதான் இருக்க நேரிடும். எனவே பாஞ்சாலி சபதம், பாரதப் பெண்ணின் சபதம் முடிவடையவே முடிவடையாது, தொடர்ந்துகொண்டேதான் இருக்கும். ஆகவேதான் தான் எழுதிய குறுங்காவியத்துக்குப் பாஞ்சாலியின் கதையைப் பாரதியார் தெரிவுசெய்திருக்கிறார். மேலும், பாஞ்சாலி சபதம் செய்யும் காட்சியோடு நிறுத்திக் கவிதையை நிறைவுகட்டி விடுகிறார் (Hari Kiruṣnan, 2016).

### முடிவுரை

பாரதியின் பாஞ்சாலி சபதம் அடிப்படையில் பெண்ணுரிமையக் காப்பதற்கான ஒரு தளமாகவே படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு யுகத்திலும் பெண்களுக்கு இழைக்கப்படுக் அநீதிகள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. அதற்கான போராட்டங்களும் தொடர்கின்றன. ஆனால் பாரதியைப் பொருத்த வரையில் பெண்களையும், பெண்ணுரிமையையும், பெண்ணின் தன்மானத்தையும் காப்பதற்கான போராட்டமானது ஆண்களிடம் இருந்து வரக் கூடாது. மாறாகப் பெண்ணிடம் இருந்தே வர வேண்டும் என்பது இவரது தீர்க்கமான முடிவு.

தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குத் தானே வெகுண்டு எனும் மனோதிடம் பெண்களிடம் தோன்ற வேண்டும். அவ்வாறு தோன்றாவிட்டால் அவள் பெறும் வெற்றியினால் அவளுக்குப் பெருமை ஏதும் இல்லை. மேலும் அது தற்காலிகமானதாகவே கருதப்படும் என்பதுவும் பாஞ்சாலி சபதம் வெளிப்படுத்தும் முக்கியக் கருத்துகளாகும். அது மட்டும் அல்லாமல் ஆணுக்குப் பெண் என்றும் சளைளத்தவள் அல்ல எனும் கூற்றையும் தனது பாஞ்சாலி சபதத்தின் வாயிலாக நிலை நிறுத்துகிறார் பாரதி.

## References


Bala. (2007). *Mahakavi Bharathiyarin Sinthanai Veli: Ilakiyath Thiranaivu.* Kavitha Publications.

Balachandran, S. (2009). *Ilakiyath Thiranaivu*. New Century Book House.

Bharathiyar. (2016). *Bharathiyin Panjali Sabatham*. Kalacuvadu Patippakam,

Eswaran, S. (2014). *Ilakiyath Thiranaivu.* Saratha Publishers.

Hari Kiruṣnan. (2016). *Bharathiyin Panjali Sabatham.* Kilakku Publications.

Rawlinson, D., H. (1968). *The Practice of Criticism.* CUP Archive.

Sekar, K. (2007). *Panjali Sabatham: Karpithal Murai.*

Subramanian, K., S. (2018). *Bharathi Sila Paarvai.* Pustaka Digital Media,

Sybil Mary Schreiber. (1966). *An Introduction to Literary Criticism.* Pergamon Press.

William Kurtz Wimsatt. (1970). *Literary Criticism: A Short History.* (Vol 1). Cleanth Brooks.

Winchester, C., T. (2013). *Some Principles of Literary Criticism.* General Books.